**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்**
**E.P. No. 40 / 2024**

**ம.சா.1 / ராஜேந்திரன் /08.08.2025**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்பு இருப்பதாக சொல்லி எவ்வித ஆவணமும் இம்மனுவில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு முத்தனம்பாளையத்தில் சொந்தமாக RC கட்டிடம் சுமார் 5 சென்ட் பரப்பளவில் இருப்பதாக சொல்வதற்கும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேலும், எதிர்மனுதாரர் விகே எக்சிம் என்ற பெயரில் பனியன் கம்பெனி நடத்தி வருவதாக சொல்வதற்கும் ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.08.11 10:25:25 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.